# இணையத்தில் பாதுகாப்பாய் இருக்க 6 அத்தியாவசிய உத்திகள்

சிறிய, நடுத்தர நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில்களின் வெற்றிக்குத் தேவையான இணையப் பாதுகாப்பைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிடக்கூடாது. குறிப்பாக, இணையத் தாக்குதல்கள் **நடக்குமா என்பதன்றி எப்போது நடக்கும்** என்ற நிலையில் நாம் உள்ளதால், சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு வழங்கும் இந்த 6 அத்தியாவசிய உத்திகளைக் கடைப்பிடித்து, இப்போதே உங்கள் நிறுவனத்தின் இணையத் தற்காப்பை வலுப்படுத்துங்கள்.

அத்தியாவசிய உத்தி

## 1 உங்கள் உடைமைகளை அறிந்துவைத்திருங்கள்

உங்கள் நிறுவனத்தின் இணையக் கூறுகளை அடையாளம் கண்டு புரிந்துவைத்திருப்பதன் வழி, பிறர் அவற்றை அத்துமீறிப் பயன்படுத்துவதைக் கண்டறிந்து தடுக்க முடியும்.

அத்தியாவசிய உத்தி

## 2 அதிகாரம் அளிக்கப்பட்ட மென்பொருள்களை மட்டும் இயங்க அனிமதியுங்கள்

நச்சுநிரல் எதிர்ப்பியுடன் (antivirus) கூடிய செயலிக் கட்டுப்பாடுகளை (application control) பயன்படுத்துங்கள், அதிகாரம் அளிக்கப்பட்ட மென்பொருள்களை மட்டுமே இயங்க அனிமதியுங்கள்.

அத்தியாவசிய உத்தி

## 3 குறித்த நேரத்தில் செயல்முறை மாற்றமைவும் புதுப்பித்தலும்

குறித்த நேரத்தில் உங்கள் இயங்குதளங்கள், நிரலாக்கத் தொடர், செயலிகள் ஆகியவற்றுக்குத் தேவையான செயல்முறை மாற்றமைவு மற்றும் புதுப்பித்தலை மேற்கொள்ளுங்கள். இதன்மூலம், இயக்க நிரல்களுக்கு நேரக்கூடிய பாதிப்புகளையும் தாக்குதல்களையும் குறைக்கலாம்.




அத்தியாவசிய உத்தி

## 4 பொருத்தமான நிர்வாக ‘உரிமைகளை’ வழங்குதல்

தாக்குதல் நிகழ்த்துவோர், கணினி அமைப்புகளை ஊடுருவி, அவற்றின் பாதுகாப்பை வலுவிழக்கச் செய்யாதிருக்க, நிர்வாகச் சிறப்புரிமைகளைக் கட்டுப்படுத்துங்கள்.

அத்தியாவசிய உத்தி

## 5 அத்துமீறல்களை விரைவாகக் கண்டறிதல்

செயல்படுத்தப்பட்ட தணிக்கைத் தடங்கள் அல்லது பாதுகாப்புப் பதிகைகளின் துணையுடன் தொடர்கண்காணிப்பை அமைப்பதன் மூலம், அத்துமீறல்களை இயன்ற அளவு விரைவாகக் கண்டறியுங்கள்.

அத்தியாவசிய உத்தி

## 6 பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல்

பயனர் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பல அடுக்குப் பாதுகாப்பு முறையைச் செயல்படுத்துவதன்வழி, அனுமதிக்கப்பட்டோர் மட்டுமே கணினி அமைப்புக்குள் நுழைவதை உறுதிசெய்யுங்கள்.




மேல்விவரங்களுக்கு, பின்வரும் முகவரியிலிருந்து உங்கள் இலவசக் கையேட்டையும் வளங்களையும் பதிவிறக்கம் செய்யுங்கள்:

www.csa.gov.sg/gosafeonline

இணையப் பாதுகாப்பைப் பாதிக்கும் சம்பவம் ஒன்றைக் குறித்து நீங்கள் புகார் செய்ய விரும்பினால், அன்புகூர்ந்து SingCERT அமைப்பைப் பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளுங்கள்:

(+65) 6323 5052

singcert@csa.gov.sg

இத்தகவலை உங்களுக்குக் கொண்டுவருவது:

CSA SINGAPORE

GO safeonline
Cyber Security Awareness Alliance

SingCERT
Singapore Computer Emergency Response Team

facebook.com/CSAsingapore
@CSAsingapore

facebook.com/gosafeonline
@gosafeonline